எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

11 மார்ச் 2018
தவக்காலம் 4ம் ஞாயிறு

Newbec

NEW WAY OF BEING CHURCH



# இறை வெளிச்சத்தில் ஒளியை பார்க்கிறோம்

உங்களுக்குப் பிடிதமான நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என வைத்துக் கொள்வோம். தீடீரென மின்சாரத் துண்டிப்பு, உங்கள் சுற்றுவட்டாரமே இருளில் மூழ்கி விட்டது. உங்களுக்கு எப்படி இருக்கும்? நீங்கள் என்ன செய்வீர்கள்? செய்வது என்னதென்று அறியாமல் இருப்பீர்கள், வேதனையாக இருக்கும். கைவிளக்கு அல்லது மெழுகுவர்த்தி தேடி, இருட்டில் தடவுவீர்கள். ஏன்? இந்த உலகத்தில் வெளிச்சம் நல்லது; வெளிச்சம் இருளைப் போக்குகிறது. நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை நம்மால் அறிய முடிகிறது. விசுவாசக் கண்ணோடு பார்த்தால், வெளிச்சம்(ஒளி) கடவுளைப் பிரதிபலிக்கிறது. ஏனெனில், ஆதியில்,"ஒளி உண்டாகுக" என கடவுள் சொன்னவுடன் ஒளி உண்டானது (தொநூ 1:3).

நல்லதையும் கெட்டதையும் விலக்குவதற்கு விவிலியத்தில் ஒளி– இருள் உவமையாக பயன்படுத்தப்படுகிறது. "உலகின் ஒளி நானே; என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்" (யோவான்8:12) என இயேசு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். உலகத்தில் இயேசு கடவுளைப் பிரதிபலிக்கிறார் என்ற நமது புரிந்துணர்வை அதிகரிக்க, ஒளியை உவமையாக காட்டும் பல ஆன்மீக நிகழ்வுகள் இருக்கின்றன. ஊடகம் என்பது செய்தி. கடவுளின் செய்தியைக் கொண்டு வருபவராகவும் அவரே செய்தியாகவும் இயேசு இருக்கின்றார்.

விசுவாசமின்மை மற்றும் வெறுக்கத்தக்க நடவடிக்கையால், யூத மக்கள் கடவுளிடமிருந்து பிரிந்து ஏழுபது ஆண்டுகள் தனிமையில் தவித்தனர் என முதல் வாசகம் கூறுகிறது. ஆனால்,இரண்டாவது வாசகத்தில் எப்போதும் நம்பிக்கைக்குரியவரான கடவுள் தமது அன்பின் ஒளியையும் இரக்கத்தையும் மக்கள் மீது காட்டுகிறார் எனக் கூறுகிறது. தொடர்ந்தாற்போல் நாம் நம்பிக்கையற்றவர்களாக நடந்து கொண்டாலும், கடவுள் நம்மீது எப்போதும் நம்பிக்கை வைத்திருக்கிறார். நம்மீது அவர் காட்டும் இரக்கத்தையும் அன்பையும் எப்போது நாம் புரிந்து கொள்ளப் போகிறோம்.

இறுதியாக, ஒளி உலகிற்கு வந்து விட்டது (யோவான் 3:19) என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இயேசுவே ஒளிக்கெல்லாம் ஒளி. "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16) என்ற நற்செய்தியை நம் மனதில் நிறுத்த வேண்டும். நாம் அனைவரும் பாவிகள், பாவத்தின் சம்பளம் மரணம், அது கடவுளிடமிருந்து நிரந்திரமாக பிரித்துவிடும் என்பதை நாம் புரிந்து கொள்வது முக்கியம். அதற்கு ஒரு வழியே உண்டு, நம் அனைவருக்கும் தன்னையே பலி கொடுத்த கிறிஸ்து. உங்களுக்காகவும் எனக்காகவும் அவர் மரித்தார். நம்மீது அவர் காட்டும் இரக்கத்தால், பரலோகத்தில் நமக்கொரு இடத்தை உறுதிசெய்து கொள்வதற்கு அவரது அருளை நாடுவது நமது பணி. மறக்காமல், யோவான் 3:16 வசனத்தை நம் மனதில் பதிந்து கொள்வோம். ✝

INTERNAL CIRCULATION ONLY
BUL 10/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்


*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*
***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***
*2018 மார்ச் (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் மறைத்தூதுப் பணிக்கு பேரார்வம்***

***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***
***( 1848 – 2018 )***

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: தவக்காலம் 4ஆம் ஞாயிறு: (ஆண்டு இரண்டு) சனி 10-03-2018 ஞாயிறு 18-03-2018**

குறி 36: 14-16, 19-23 தி.பா 136: 1-2, 3, 4-5, 6 எபேசி 2: 4-10 யோவான் 3: 14-21

**உன்னை நான் நினையாவிடில், என் நா மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக ! ( தி. பா 136 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 10 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (இளைஞர் குழு) | |
| ஞாயிறு | 11 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 ம | திருப்பலி (தமிழ்) (மறைக் கல்வி-படிவம் 1,2)<br>திருப்பலி (ஆங்கிலம்) (புனித டேவிட்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 12 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 13 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 14 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 15 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 16 | கா.திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.00 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும் தொடர்ந்து திருப்பலியும் (ஆ / த /சீ /தே.மொ)*** |

**தவக்காலம் 5ஆம் ஞாயிறு: ( ஆண்டு இரண்டு)**

எரே 31: 31-34 தி.பா 50: 3-4, 12-13, 14-15 எபிரே 5: 7-9 யோவான் 12: 20-33

**கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும். ( தி. பா 50 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 17 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனத மாத்தா) | |
| ஞாயிறு | 18 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 ம | திருப்பலி (தமிழ்) (அன்னை வேளாங்கண்ணி)<br>திருப்பலி (ஆங்கிலம்) (புனித மார்ட்டின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை வழி நடத்திய மறைக்கல்வி படிவம் 1, 2 மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 மார்ச் (பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

i) **பங்கு ஆலய காணிக்கை**
03/04 மார்ச் 2018 - ரிம: 10,360.00
சமூக அக்கறைப் பணிக்குழு ரி.ம 7,184.00

**இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!**

ii) **ஈஸ்டர் பெருவிழாவிற்காக** ஆலயத்தை தூய்மைப்படுத்துதல் (வெள்ளி) 23 03-2018 காலை 8.00 - 10.00 வரை- சுத்தப்படுத்த தேவையான பொருட்களை உடன்கொண்டு வரவும்.

iii) **காலை சிற்றுண்டிவிற்பனை:** 11-03-2018 - ஆங்கில மறைக்கல்வி (படிவம் 5) மாணவர்கள் தங்களுடைய நிதிக்காக விற்பனை செய்கிறார்கள். வாங்கி ஆதரவு அளியுங்கள்.

iv) **திருப்பலி** - அருள்தந்தை இக்னேசியஸ் ஹுவான் அவர்கள் எழுதிய புத்தகத்தை வாங்க வரும்புவோர் இந்த அகப்பகத்தை நாடுங்கள். www.ignatiushuan.com

v) மறைக்கல்வி (தே.மொ) பயிற்றுவிக்க ஆசிரியர்கள் தேவை. தொடர்புக்கு மரியா கெவ்ரின் : 013 832 9440

**2018 ஆம் ஆண்டின் தவக்காலத்தில் ஒப்புராவாகுவோம்.**

12-03-(திங்): மாலை 7.30 திருக்குடும்ப தேவாலயம், காஜாங்
மாலை 7.30 புனித கிறிஸ்டோபர், தம்பின்
13-03- (செவ்): மாலை 7.30 திருஇருதய ஆண்டவர் கோலாலம்பூர்
14-03- (புதன்):மாலை 7.00 புனித பிரான்சிஸ் சவேரியார், பெ.ஜெ
15-03- (வியா): இரவு 8.0 0 லூர்து அன்னை ஆலயம், கிள்ளான்
: இரவு 8.00 மரியாள், இறைவனின் தாய், பஹாவ்
16-03- (வெள்): பகல் 12.30 யோவான் பேராலயம், கோலாலம்பூர்
19-03- (திங்): இரவு 8.00 திருசெபமாலை ,கோலாலம்பூர்
மாலை 7.30 நல்லாயன் ஆலயம், ஸ்தாப்பாக்
22-03-(வியா): இரவு 8.00 விண்ணேற்பு ஆலயம், பெ.ஜெ

- **கிபுமுவ (ஆங் & தேமொ)** போர்ட்டிக்சனில் அவர்களுடைய தியானம் நடைபெறும்.(10-11 மார்ச்) அவர்களுக்காக நாம் செபிப்போம்.
- **மரியாயின் சேனை** சிரம்பான் மார்ச் 18 ஞாயிறு பகல் 2.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெறும்
- **"சோய்ஸ்" ஆங்கிலத்தில்** ஏப்ரல் 13-15 வரை நடைபெறுகிறது. தொடர்புக்கு கிரேஸ்(012-350 9817) ப்ரண்டன் (017-6197 834)
- **ஆங்கில மறைக்கல்வி** மாணவர்களின் அருளடையாள முகாம்(படிவம் 3) 23-25 மார்ச். அவர்களுகாக நாம் செபிப்போம்.

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்.**
சில்வெஸ்டர் சேகர் (இறப்பு: 05-03-2018)
செல்லாமேரி ஆரோக்கியசாமி (இறப்பு: 08-03-2018)
முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக

- **இத்தவக்காலத்தில் நான் என்ன செய்யமுடியும்?** (lent.aohd.org)(www.facebook.com/Lenten campaign)
- **2018 ஆம் ஆண்டின் தவக்கால கருப்பொருள்:** நம்முடைய பொது இல்லமான பூமியைப் பாதுகாப்போம். சுற்றுச் சூழல் மாற்றத்தின் பணியாளர்கள் நாம்.
  - எதை நோக்கி நாம் பயணிக்கின்றோம்?
    நம்முடைய விலைமதிக்க முடியாத பரிசான நமது இல்லத்திற்கு தீமை நடப்பதை நாம் பார்க்கிறோம். இதுபோன்ற வீட்டில் உங்களுக்கு வாழ விருப்பமா?
  - **உங்களுக்குப் பிடித்த வெளிப்புற நடவடிக்கை என்ன? அ)............ஆ............இ)............**
  - **நம்முடைய பொது இல்லமான பூமியைச் சீர்படுத்த நீ என்ன செய்ய முடியும்? அ)............ஆ............இ)..........**
- **மருத்துவ முகாம் மற்றும் இரத்த தானம்:** பங்கு மனித வள மேம்பாட்டுக்குழு/கத்தோலிக்க மருத்துவர்கள் சங்கம்/சிரம்பான் பொது மருத்துவமனை இணைந்து நடத்தும் மருத்துவ முகாம். குறிப்பாக ஏழைகள், உதவி தேவைப்படுவோர், குடியேற்றவாசிகள், அகதிகள் மற்றும் வயது முதிர்ந்தோர் போன்றவர்களுக்கு.
  - 18-03-2018 காலை 8.00 முதல் பகல் 3.00 வரை மினவுதல் தேவாலய மண்டபத்தில் நடைபெறும்.
  - மருத்துவ முகாம்: நம் பங்கில் உள்ள மருத்துவர்கள்/தாதியர்களை இதில் இணைந்து பணியாற்ற அழைக்கிறோம். தொடர்புக்கு: பெட் ரீசியா (012-2026 528) அல்லது பங்கு அலுவலகம்
- **சூப் கிச்சன்:** தவக்காலத்தில் உங்களுடைய ஒரு மணி நேரத்தை என்னோடு செலவிட விருப்பமா?
  - ஒவ்வொரு செவ்வாய் காலை 9.30 - 11.30 வரை ஏழைகளோடும், பசித்திருப்போர், வீடின்றி இருப்போரோடு உங்களுடைய நேரத்தைப் பயன்படுத்துங்கள்.
  - மினவுதல் தேவாலய உணவி விடுதியைச் சீரமைக்க உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நமது நன்றிகள்.
- **ஏழைகளுக்கான பணிக்குழு** -"மகனே, நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய்; அதே வேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார்" (லூக்கா 16:25) எங்களோடும், பங்கு குருவானவரோடும் இணைந்து இதில் பணி செய்ய உங்களை ஈடுபடுத்திக்கொள்ளுங்கள். தொடர்புக்கு பங்கு அலுவலகம்.
- **உதவி தேவைப்படுவோருக்கு உதவுங்கள்:** உணவுப் பொருட்களை தானம் செய்யுங்கள். (உ.ம். அரிசி, சீனி, கோதுமை மாவு, எண்ணெய்) பங்கு அலுவகத்தில் சேர்ப்பிக்கவும். நன்றி.
- **சிலுவைப் பாதை பக்தி முயற்சியில் ஈடுபடுவோம்.**

16/03/2018 - குடும்ப அளவில் - மன்னிப்பு
23/03/2018 - தனிப்பட்ட ரீதியில் - உண்ணா நோன்பு மற்றும் செபம் - திருத்தந்தையின் கருத்துகளுக்காக)
30/03/2018 - புனித வெள்ளி - பங்கு இளைஞர்கள் வழிநடத்தும் செப நடை - மெழுகுத்திரி பவனி சிறையிலிருப்போருக்காக.

- **தவக்கால உறைகள்**: உங்களுடைய தவக்கால காணிக்கையைச் செலுத்துங்கள். உறைகள் ஆலய நுழைவாயில் வைக்கப்பட்டுள்ளது.
- **ஆலய உணவு விடுதியின் பயன்பாடு**: அனைத்து நேரங்களிலும் ஆலய உணவு விடுதியை சுத்தமாக வைத்திருக்க உதவுங்கள். மேசை, நாற்காலியை அதனதன் இடத்திலேயே வையுங்கள். அதை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டாம். இந்த நடவடிக்கை ஆலயத்தின் இரண்டு பக்கங்களில் இருக்கும் கூடாரத்திற்கும் பொருந்தும்.
- **விசேச உறுதிப்பூசுதல் வகுப்புகள் 2018 - (ஆங்கிலம் & தேமொழி)** உரிய வயதில் உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை பெறத் தவறியவர்களுக்கான விசேச வகுப்புகள் ஏப்ரல் 15, 2018 அன்று தொடங்கவிருக்கின்றன. உங்களுடைய பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளுங்கள்.
- **சோய்ஸ் தமிழ்** : 6–8 ஏப்பிரல் 2018 APC கோலாலும்பூர், கட்டணம் ரி.ம 130, தொடர்புக்கு : ரெய்மன்ட் பன்னீர்செல்வம் 016 689 4257

- **திருத்தைலத் திருப்பலி 2018** (புதன்) **21-03-2018** - புனித இக்னேசியஸ் ஆலயம், பெட்டாலிங் ஜெயா இரவு 7.00 மணி
- **இளைஞர்களின் ஆண்டு தொடக்கக் கொண்டாட்டம்;** மார்ச் 24-25 (குருத்து ஞாயிறு)
- **வின்செண்ட் டி போல் இயக்கத்தினரின்** ஆண்டு பொதுக்கூட்டம் மார்ச் 25 (ஞாயிறு) பகல் 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தின் மேல்மாடி